பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 09 நாள்: 23.01.2018

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் தலைமையில் ரூ.10.43 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கி, நம்ம சென்னை என்ற புதிய செயலி மற்றும் சீர்மிகு நகரத்திற்கான புதிய வலைதளத்தினையும் துவக்கி வைத்தார்.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் தலைமையில் 32 சென்னைப் பள்ளியைச் சார்ந்த 6,518 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.16,000 வீதம் ரூ.10.43 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி, பொதுமக்கள் கருத்து தெரிவிக்கும் வண்ணம் நம்ம சென்னை என்ற புதிய செயலியினையும் (Namma Chennai App), சீர்மிகு நகரத்திற்கான புதிய வலைதளத்தினையும் இன்று (23.01.2018) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி, பேசும்பொழுது தெரிவிக்கையில், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் செயல்படும் 119 தொடக்கப்பள்ளிகள், 92 நடுநிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகளில் தற்பொழுது 85,910 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக மாணவ, மாணவியர்கள் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி கல்வி பயின்றிடும் வகையிலும், மாணவர்கள் உலகளவிலான வேலைவாய்ப்புகளை பெற வேண்டும் என்பதற்காகவும், போட்டித்தேர்வுகளில் பங்குகொண்டு வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும், தங்களுக்கு தேவையான அறிவியல் மற்றும் சமூகம் சார்ந்த தகவல்களை இணையதளத்தின் வாயிலாக பெற்று பயனடைய வேண்டும் என்பதற்காகவும், அரசு பள்ளிகளில் பயிலும் 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் மற்றும் பாலிடெக்னிக் தொழில்நுட்ப

பயிற்சி கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை ஏற்படுத்தினார்கள். அதனடிப்படையில் தமிழக அரசின் சார்பில் 2011–2012ம் ஆண்டு முதல் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னைப் பள்ளிகளில் 2011ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை 31,484 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.50.37 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பள்ளிகளுக்கும், சிறப்பு பாட வகுப்பிற்கும் உரிய நேரத்தில் சென்று வர தமிழக அரசின் சார்பில் 11ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012 முதல் 2016–2017 வரை சென்னைப் பள்ளிகளைச் சேர்ந்த 38,626 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் வெளிச்சம் மற்றும் நல்ல காற்றோட்டத்துடன் கல்வி பயிலும் வகையில் 35 கூடுதல் வகுப்பறைகள், 9 ஆய்வக அறைகள் அடங்கிய 22 கட்டடங்கள் மற்றும் ஒரு அரங்கம் ரூ.17.69 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. மாணவர்கள் விளையாட்டுகளில் சிறந்து விளங்கிட விளையாட்டு பயிற்சிகளும், அனைத்து மாணவர்களும் உடல் ஆரோக்கியத்துடன் திகழ்ந்திட எம்.ஜி.ஆர். நகர் சென்னை மேல்நிலைப்பள்ளியில் உலகத்தரம் வாய்ந்த கால்பந்து மைதானம் ரூ.92 இலட்சம் மதிப்பீட்டிலும், 9 பள்ளிகளில் தலா ரூ.20 இலட்சம் வீதம் ரூ.1.8 கோடி மதிப்பீட்டில் கூடைப்பந்து விளையாட்டு மைதானங்களும், குழந்தைகள் விளையாடி மகிழ 30 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் கண்கவர் விளையாட்டுப் பூங்காக்கள் தலா ரூ.2 இலட்சம் வீதம் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, மின்வசதி, தனித்தனி கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும், அனைத்து பள்ளிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 57 உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் தொய்வின்றி சிறந்து நடைபெற மின்னாக்கிகள் (Generators) ரூ.2.68 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. 13 பள்ளிகளுக்கு மின்னாக்கிகள் பொருத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கும், 14 நடுநிலைப் பள்ளிகளுக்கும் வள வகுப்பறை (Smart Class) வசதி ரூ.4.2 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு கணிப்பொறி வழிக்கல்வி பயிற்சி அளிக்கப்பட்டு, ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு சிறப்பாக கணினி குறித்த பயிற்சி வழங்க ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 211 பள்ளிகளுக்கு ஒளித்திரை (Projector) வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியினை ஊக்கப்படுத்தும் பொருட்டு, 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் வெற்றி பெற்று பி.இ., எம்.பி.பி.எஸ்., படிப்பில் சேரும் மாணவ, மாணவியர்களுக்கு கலந்தாய்வின் போது ரூ.5,000/–மும், கல்லூரியில் சேரும் பொழுது கல்வியாண்டு தொடக்கத்திலேயே ரூ.40,000/– மேற்படிப்பு ஊக்கத்தொகையும், மற்ற 3 ஆண்டுகளுக்கு வருடந்தோறும் ரூ.45,000/–மும் வழங்கப்படுகிறது. இதுவரை 2011ம் ஆண்டு முதல் 2017 வரை 1,389 மாணவர்களுக்கு ரூ.5.18 கோடியும், வருடந்தோறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேரும் 100 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.7,000/– வீதம் 1609 மாணவர்களுக்கு ரூ.84.13 இலட்சமும், ஆசிரியர் பயிற்சி, நர்ஸிங் மற்றும் சட்டம் பயிலும் 50 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.10,000/– வீதம் 846 மாணவர்களுக்கு ரூ.52.91 இலட்சமும், இதர படிப்புகளுக்கு தலா ரூ.25,000 வீதம் 5 மாணவர்களுக்கு ரூ.1.25 இலட்சம் என மொத்தம் 3,849 மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கல்வியாண்டும் 100 சதவீதம் தேர்ச்சி பெறும் பள்ளிகளுக்கும் ரூ.1,00,000/– ரொக்கப்பரிசும், பொதுத்தேர்வில் முழுத்தேர்ச்சி பெற வைத்த ஆசிரியர்களையும் மற்றும் பாடவாரியாக முழு மதிப்பெண் பெற வைத்த ஆசிரியர்களையும் ஊக்குவிக்க ரொக்கப்பரிசாக ரூ.1,500/– வழங்கப்படுகிறது. 10ம் வகுப்பில் 400 மதிப்பெண்கள், 12ம் வகுப்பில் 1000 மதிப்பெண்களுக்கு மேல் மற்றும் பாடவாரியாக முழு மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.1500/–ம் வழங்கப்பட்டு வருகிறது. 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 50 மாணவ, மாணவியர்கள் வருடந்தோறும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

Wings to Fly என்ற நிகழ்வின் கீழ் தனியார் பங்களிப்புடன் பேச்சுப்போட்டியில் வெற்றிபெறும் மாணவ மாணவியர்கள் வருடந்தோறும் வெளிநாடுகளுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர். அதனடிப்படையில் கடந்த 2 ஆண்டுகளாக மலேசியா, ஜெர்மன் போன்ற வெளிநாடுகளுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். 100 சதவீதம் வருகைப் புரிந்த மாணவர்களுக்கு ரூ.1000/– ஊக்கத்தொகையும், 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் மாலை நேர சிறப்பு வகுப்பில் சோர்வின்றி படிக்க புரதச்சத்துமிக்க சுவையான சுண்டல் தினமும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை பயன்படுத்தி மாணவ மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும்.

பொதுமக்களின் குறைகளை எவ்வித காலதாமதமின்றி உடனடியாக நிவர்த்தி செய்ய, அதிகாரிகளுக்கு கைபேசி மூலமாக எளிய முறையில் குறைதீர்க்கும் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கைபேசி செயலி மூலமாக பெறப்படும் மனுக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு, அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கை விவரங்களை மனுதாரருக்கு கைபேசி செயலி மூலமாகவே உடனுக்குடன் தெரிவிக்கும் வண்ணம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் குறைகள் எவ்வித காலதாமதமின்றி உடனடியாக நிறைவேற்றப்படுகிறது.

உதாரணமாக, தெருவிளக்கு பராமரிப்பு, குப்பை அகற்றுதல், நாய் தொல்லை, சாலைப்பணிகள் பராமரிப்பு, மழைநீர் வடிகால் பராமரிப்பு போன்ற பொதுமக்களின் புகார்கள் கைபேசி செயலி மூலமாக பதியப்பட்டு, புகார்கள் அனைத்தும் எல்லைக்குட்பட்ட துறை சார்ந்த அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று பொதுமக்களின் குறைகள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ள இந்த கைபேசி செயலி வழிவகை செய்கிறது.

இன்றைய அதிநவீன, அதிவேக மின்னணு உலகத்தில், தகவல் பறிமாற்றங்களுக்கு மிக முக்கியமாக விளங்குவது வலைத்தளங்கள் தான். சென்னை ஸ்மார்ட் சிட்டிவலைத்தளம், நமது சென்னையினை ஒரு ஸ்மார்ட் சிட்டியாக மேம்படுத்த எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்குமான ஒரு ஒருங்கிணைந்த மேடையாக விளங்கும்.

சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்டின் முடிவுற்ற, மேற்கொள்ளப்படும் மற்றும் வரப்போகும் அனைத்து திட்டங்களைக் குறித்த தகவல்களும் இந்த இணையதளத்தின் மூலம் ஒருவர் அறிந்து கொள்ளலாம். பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் இருந்து கண்காணிக்க இத்தளம் உதவும்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்கு அடிப்படையான நகர்ப்புற கொள்கைகள் பற்றிய பல கட்டுரைகள் மற்றும் புள்ளிவிவரங்கள் இங்கே கிடைக்கும். மக்களின் நன்மைக்காக டிஜிட்டல் வகுப்பறைகள் முதல் நகர்ப்புற பூங்கா திட்டங்கள் வரை அனைத்து விதமான திட்டங்களின் வரைவும் இத்தளத்தில் கிடைக்கப் பெறும் மற்றும் அத்திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து அறியும் வண்ணம் அறிக்கைகளும் அவ்வப்பொழுது பதிவேற்றம் செய்யப்படும்.

சென்னை ஸ்மார்ட் சிட்டி இணையதளம் இருவழி தகவல் பறிமாற்றத்தை வழிவகுக்கும், ஆகையால் ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் குறித்து மக்களும் மாநகராட்சியை எளிதில் அணுகலாம். மக்கள் மற்றும் அரசுக்கு இடையே கூட்டுறவை மேம்படுத்துவதற்கு இது உதவும்.

இத்தளத்தினை வெளியிடுவது மூலம், மக்களுக்கு ஒரு உண்மையான அறிக்கை அட்டையினை வழங்க முயற்சிக்கிறது, பெருநகர சென்னை மாநகராட்சி. இத்தளத்தின் லோகோ முதல் கடைசி திட்டம் வரை அனைத்தும் சென்னை மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திட ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.ஆர்.விஜயகுமார், திரு.டி.ஜி.வெங்கடேஷ் பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.என்.விருகை ரவி, திரு.பி.சத்யநாராயணன், திரு.ஆர்.நட்ராஜ், திரு.வி.அலெக்ஸாண்டர், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திருமதி எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., டாக்டர் சுபோத் குமார், இ.ஆ.ப., திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பாலகங்கா மற்றும் கல்வித்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**